Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 37/2024 PW-3**

Name : பவானி
Father / Husband name : ஏழுமலை
Village : திண்டிவனம்
Age : 50
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 18.07.2025

Accused absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counsel present.

<u>முதல் விசாரணை</u>

நான் வீட்டுவேலை செய்கிறேன். வழக்கில் இறந்துபோன சந்திரா எனது நாத்தனார். சாட்சி ஜோதி எனது உறவினர். அசா.2 ஏழுமலை எனது கணவர். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் காலை நான் வீட்டில் இருந்தபோது சந்திராவிற்கு திண்டிவனம் காவல் நிலையத்திற்கு அருகே லாரிமோதி விபத்து ஏற்பட்டதாகவும், அவரை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக போலிசார் வந்து சொன்னார். பின்னர் சந்திரா இறந்துவிட்டார். இதுசம்மந்தாக போலிசார் சொன்னார்கள்.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 14.06.2023 ம் தேதி மதியம் சுமார் 1மணியளவில் வசந்தஅன்கோ கடைக்கு சென்றுவிட்டு எனது நாத்தனார் சந்திரா சாப்பாடுவாங்கிக்கொண்டு திண்டிவனம் டிராவல்ஸ் பங்களா அருகே விழுப்புரம் - திண்டிவனம் செல்லும் ஜிஎஸ்டி சர்வீஸ் ரோட்டை கடக்கும்போது TN 21 BB 5757

நாராயணமூர்த்தி தனியார்பேருந்து அதிவேமாகவும், கவனக்குறைவாகவும் வந்து சந்திராவின் மோதி விபத்து ஏற்பட்டது என்றும், அந்த விபத்தில் சந்திராவிற்கு காயம் ஏற்பட்டு கீழே விழுந்தார் என்றும், நானும் எனது கணவரும் 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம் என்றும் அ.சா.1 க்கு தகவல் சொன்னோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 37/2024 PW-4**

Name : சபரீசன்
Father / Husband name : ராஜேந்திரன்
Village : திண்டிவனம்
Age : 34
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 18.07.2025

Accused absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counsel present.

**முதல் விசாரணை**

நான் மயிலம் ரோட்டில் அயர்ன் வேலை செய்துவருகிறேன். சாட்சி சரவணன் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 3 வருடத்திற்கு முன்னதாக ஒருநாள் மாலைநேரத்தில் ஜாக்கம்பேட்டையிலிருந்து எனது கடைக்கு வரும்வழியில் நானும் சரவணனும் திண்டிவனம் டிராவல்ஸ் பங்களா அருகே வரும்போது போலிசார் அங்கு நடந்த விபத்து சம்மந்தமாக படம் வரைந்து எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். படம் வரைந்தது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். **பார்வை மகசரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc முடித்துள்ளேன். சாட்சி சரவணன் ஒத்தவாடியை சேர்ந்தவர் என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.3, சரவணன், ராஜரத்தினம் ஆகியோர் ஒத்தவாடியை சேர்ந்தவர்கள், எனது உறவினர்கள் என்றால் இல்லை, எனது தெரிந்த நபர்கள். ஜோதியின் அக்கா விபத்தில் அடிபட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அது

சம்மந்தமாக பஞ்சாயத்தார்கள் முறையில் திண்டிவனம் காவல் நிலையம் சென்றார்கள் என்றால் தெரியாது. நான் கையொப்பம் செய்த தாள் எழுதியிருந்தத அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா என்றால் கையால் எழுதப்பட்டிருந்தது. நான் வரைபடம் ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்தவரின் உறவினர்கள் எனது நண்பர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதால் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 37/2024 PW-5**

Name : சரவணன்
Father / Husband name : ராஜரத்தினம்
Village : திண்டிவனம்
Age : 43
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 18.07.2025

Accused absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counsel present.

**முதல் விசாரணை**

நான் திண்டிவனத்தில் கிடங்கல் 1 ல் ஒத்தவாடை தெருவில் சலூன் கடை நடத்திவருகிறேன். அ.சா.4 சபரீசன் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 2 வருடத்திற்கு முன்னதாக ஒருநாள் மாலைநேரத்தில் திண்டிவனம் மகளிர் காவல் நிலையத்திற்கு அருகேயுள்ள பாபா கோவில் அருகே நானும் சபரீசனும் வண்டியில் வந்துகொண்டிருந்தபோது போலிசார் அங்கு நடந்த விபத்து சம்மந்தமாக மேப் வரைந்து எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். **பார்வை மகசரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். சாட்சி ராஜரத்தினம் எனது அப்பா என்றால் சரிதான். அவர் இந்த வழக்கில் சாட்சியாக உள்ளார் என்றால் சரிதான். விபத்தில் இறந்த சந்திரா எனது அத்தை என்றால் சரிதான். இந்த வழக்கில்

சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் சரிதான். இறந்தவர் உடலை போஸ்ட்மார்டம் செய்ய சம்மந்தமாக திண்டிவனம் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். அ.சா.4 சபரீசன் எனது நண்பர் என்பதால் அவரையும் அழைத்துச்சென்றேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் போலிசார் பஞ்சாயத்தார் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். அவ்வாறு நானும் அ.சா.4 கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பித்த கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் காவல் நிலையத்திற்கு வெளியே அருகில் வைத்து கையொப்பம் செய்தேன். காவல் நிலையத்திற்கு உள்ளே எழுத்தர் இடத்தில் கையொப்பம் செய்தேன் என்றாலும், சந்திரா எனது உறவினர் என்பதால் பொய்யான சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.